புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கொத்தமங்கலம் கிராமத்தில், மாநிலங்களவை உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தினை, மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 28.07.2024 அன்று திறந்து வைத்தார்கள். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (அறந்தாங்கி) மரு.நமச்சிவாயம், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

கொத்தமங்கலத்தில் தரம் உயர்த்தப்பட்ட - புதிய

அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம்!

ப.சிதம்பரம் எம்.பி. - அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கார்த்தி சிதம்பரம் எம்.பி. திறந்து வைத்தனர்!

புதுக்கோட்டை, ஆக. 2 - புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கொத்தமங்கலம் கிரா மத்தில், மாநிலங்களவை உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தினை, மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் , சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் 28.07.2024 அன்று திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி, முத்து லெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத் தின்கீழ் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள். தமிழக அரசு ஏழை, எளிய மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் பல் வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் பொதுமக்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சைகள் வழங்கிடும் வகையில், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவம் சார்ந்த கட்டடங்கள் கட்டி திறந்து வைக்கப்பட்டு வருகிறது. அதன்படி கொத்தமங்கலம் கிராமத்தில் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் 257.65 சதுர மீட்டர் பரப்பளவில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த புதிய கட்டடத்தில், மருத்துவ அலுவலர் அறை, மருந்தக அறை, கழிப்பறையுடன் கூடிய பிரசவ அறை, அவசர சிகிச்சைப் பிரிவு, ஆய்வக அறை, ஊசி செலுத்தும் அறை, கட்டுப்போடும் அறை, பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கழிப்பறை உள்ளிட்ட பல்வேறு அறைகளுடன் சிறப்புடன் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்கள் மருத்துவத்திற்காக நீண்ட தூரம் சென்றுவருவது தவிர்க்கப்பட்டு, தங்களது இல்லங்களுக்கு அருகாமையிலேயே மருத்துவ சிகிச்சைகள் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இப்பகுதி பொது மக்கள் அனைவரும், இந்த புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தினை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு நோயற்ற நல் வாழ்வு வாழ்ந்திட வேண்டும்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (அறந்தாங்கி) மருத்துவர் நமச்சிவாயம், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, மேனாள் திருமயம் சட்டமன்ற உறுப்பினர் ராம.சுப்புராம், ஆலங்குடி வட்டாட்சியர் பெரியநாயகி, வட்டார மருத்துவ அலுவலர் ராம்சந்தர், கொத்தமங்கலம் ஊராட்சிமன்றத் தலைவர் சாந்தி வளர்மதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ரூ.1578.30 இலட்சம் மதிப்பீட்டில் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், சென்னம்பட்டி வலது பிரதான கால்வாய் நெடுக்கை 1120 மீ அருகே தெற்கு ஓடையின் குறுக்கே தடுப்பு பகிர்மான கட்டடம் கட்டி பாசன நீர் வழங்குதல் மற்றும் சென்னம்பட்டி வலது பிரதான கால்வாய்களை புனரமைத்தல் போன்ற பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் காரியாபட்டி ஒன்றிய செயலாளர் கண்ணன், காரியாபட்டி பேரூர் செயலாளர் ஆர்.கே.செந்தில், மாவட்ட கவுன்சிலர் தங்க தமிழ்வாணன், குண்டாறு வடிநிலைக் கோட்டம் செயற்பொறியாளர் வி.நிறைமதி, குண்டாறு வடிநிலை உபகோட்டம் உதவி செயற்பொறியாளர் கி.முத்துச்சாமி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்

டாக்டர் வை.முத்துராஜா தந்தை பேராசிரியர் கே.வைரக்கண்ணு மறைவு!

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கே.ஆர்.பெரியகருப்பன், சிவ.வீ.மெய்யநாதன் அஞ்சலி!

புதுக்கோட்டை, ஆக. 2- புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரும்,கழக மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளருமான டாக்டர் வை. முத்துராஜாவின் தந்தையாரும், அரசினர் மாட்சிமை தாங்கிய மன்னர் கலை கல்லூரியின் முன்னாள் பேராசிரியருமான கே.வைரக் கண்ணு (வயது 86) அவர்கள் வயது முதிர்வின் காரணமாக 30.7.2024 அன்று காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ. அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் கூறினார்கள்.

மேலும், டாக்டர் வை. முத்துராஜா எம்எல்ஏ, இல்லம்", நெ.6001, ஜெ.என். நகர், அன்னசத்திரம், (அரிமளம் ரோடு) புதுக்கோட்டையில் வைக்கப்பட்ட அவரது தந்தையார் உடலுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுசூழல் காலம் நிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன்,இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ., அசோக்குமார் எம்.எல்.ஏ., ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சின்னத்துரை எம்.எல்.ஏ., மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன்,மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் த.சந்திரசேகர், மாவட்ட ஆட்சியர் எம்.அருணா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் லியாகத் அலி, மாநகர செயலாளர் ஆ.செந்தில், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் ஆகியோர் நேரில் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மேலும், மாவட்ட, ஊராட்சி குழு தலைவர் ஜெயலெட்சுமிதமிழ்செல்வன்,மாவட்ட துணை செயலாளர்கள் பெ.ராஜெஸ்வரி, ஞான.இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் என்.சாத்தையா, தலைவர் ஆர்.ரத்தினவேல், புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய செயலாளர்கள் மு.க.ராமகிருஷ்ணன், சுவாமிநாதன், தவ.பாஞ்சாலன், முத்துகிருஷ்ணன், கே.எஸ். சந்திரன், ஆர்ஆர்எஸ்.மாரிமுத்து, சத்தியசீலன், ஒ.எஸ்.வி. வெங்கடாசலம், கே.பி. கே.டி.தங்கமணி, அரு.வடிவேலு, பா.குமார், சக்தி. ராமசாமி, அழகு.சிதம்பரம், ஒன்றிய பெருந்தலைவர்கள் கே.ஆர்.என்.போஸ், மாலா ராஜேந்திரதுரை, மேகலா முத்து, அரசு பொது வழக்கறிஞர் பா.வெங்கடேசன், அரசு கூடுதல் வழக்கறிஞர் ரமேஷ், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய ஆலோசனைக்குழு உறுப்பினர் ஏ.கே.செல்வம், வடக்கு மாவட்ட மருத்துவ ரணி அமைப்பாளர் மு.க.முத்துகருப்பன், தெற்கு மாவட்ட மருத்துவ ரணி துணை தலைவர் டாக்டர் ஆர்.கண்ணதாசன், பிஆர்ஒ.பா.சக்திவேல், டாக்டர் எஸ்.நசீம், ஆசிரியர் ஆர்.நெடுஞ்செழியன், ஆசிரியர்,க.காந்தி, மற்றும், சட்டமன்ற உறுப்பினர்களும்,,கழக மாநில, புதுக்கோட்டை வடக்கு,தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகளும், ஒன்றிய கழக நிர்வாகிகளும், அனைத்து அணி நிர்வாகிகளும், வட்ட கழக நிர்வாகிகளும், மாமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சி பிரதிநிதிகளும், அனைத்து கட்சி பிரமுகர்களும், பொதுமக்களும் அன்னாரது உடலுக்கு, மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

1.8.2024 வியாழன் கிழமை மாலை 3 மணிக்கு இறுதி ஊர்வலமாக புறப்பட்டு, போஸ் நகர் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மறைந்த பேராசிரியர் கே.வைரக்கண்ணுக்கு வை.கணபதி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. ஆகிய இரண்டு மகன்களும், வை.திலகவதி, வை.சுமதி ஆகிய இரண்டு மகள்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு மாநில

மகளிர் ஆணையத்தின் தனி வலைதளம்!

அமைச்சர் பி.கீதாஜீவன் தொடங்கி வைத்தார்!

சென்னை,ஆக.2- தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் பிரத்யேக வலைத்தளத்தினை 30.07.2024 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் துவக்கி வைத்தார்கள்.

பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் மற்றும் பெண்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. 19.03.1993ஆம் நாள் முதல் அரசாணையின் மூலம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வந்த இவ்வாணையம் 30.07.2008 முதல் சட்ட ரீதியான அமைப்பாக (Statutory Body) செயல்பட்டு வருகிறது. கடைசியாக இவ்வாணையம் 11.02.2022 அன்று மாற்றியமைக்கப்பட்டு (Reconstitution), திருமதி.அ.ச.குமரி அவர்களின் தலைமையில் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களால் பாதிக்கப்படும் மகளிர் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு நேரடியாகவும், மின்னஞ்சல் வாயிலாகவும், தபால் மூலம் புகார் மனுக்களை அளித்து வருகின்றனர். இவற்றிக்கு ஆணையம் காவல் துறை, நீதித்துறை, மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மாவட்ட சமூகநல அலுவலர்கள், பாதுகாப்பு அலுவலர்கள், ஒருங்கிணைந்த சேவை மையங்கள், தன்னார்வ சமூக அமைப்புகள் ஆகியவற்றின் உதவியுடன் உரிய தீர்வு காண முயல்வதுடன் நேரடி விசாரணைகள் வாயிலாகவும் சில புகார் மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணப்பட்டு வருகிறது. பொதுவெளியில் பெண்கள் பாதிக்கப்படும் போது அத்தகைய பிரச்சனைகளிலும் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொள்ளுகிறது.

குடும்ப வன்முறை, சொத்துபிரச்சனை மற்றும் எதிர்பாராத இன்னல்களை எதிர்கொள்ளும் மகளிர் சட்ட ரீதியான ஆலோசனைகள் பெறுவதற்கும் மகளிர் ஆணையம், மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு உதவியுடன் இலவச சட்டசேவை மையத்தினை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தடுப்பு, பெண்களுக்கான சட்டங்கள் மற்றும் உரிமைகள், சமூக வலைத்தளங்களில் பெண்கள் பாதுகாப்பு, பெண்களுக்கான உதவி எண்கள் ஆகியவை குறித்து அனேக கருத்தரங்குகளை நடத்தி மகளிருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மேலும் சட்டம், சமூகபணி, சமூகவியல், பொது நிர்வாகம் போன்ற இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் பயிலும் மாணவ, மாணவிகளும் இங்கு உள்ளுறை பயிற்சி பெற்று பயனடைந்து வருகின்றனர்.

எனவே, மகளிர் ஆணையத்தின் பணிகள் அனைத்து மகளிருக்கும் சென்றடைந்து அவர்கள் பயணடையும் வகையிலும், தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இக்கால கட்டத்தில் மகளிர் அனைத்து தகவல்களையும் இணையதளம் வாயிலாக தெரிந்து கொள்ள விரும்புவதால் ஆணையத்திற்கென முதன்முறையாக தனி வலைதள முகவரி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முகவரி www.tnwomencommission.tn.gov.in. இவ்வலைதளத்தில் ஆணையத்தின் அமைப்பு, பணிகள், தொடர்பு கொள்ளுவதற்கான ஊடக முகவரிகள், பெண்களுக்கான சட்டங்கள் மற்றும் தொடர்புடைய துறைகளை அணுகுவதற்கான முகவரிகள் ஆகியவை விரிவாக வழங்கப்பட்டுள்ளன.

மேலும் வருங்காலத்தில் இணையதளம் வாயிலாகவே மகளிர் தங்கள் புகார்களை பதிவு செய்யவும், அவற்றின் மீது ஆணைய வாயிலாக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், புகார் மனுக்களின் மீது தாமத நடவடிக்கை கண்காணித்திடவும் ஏதுவாக இவ்வலைத்தளத்தில் தனி இணைப்பு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மகளிர் தங்கள் புகார்களை இணையம் வாயிலாக பதிவு செய்யவும், அவை நிலுவையில் உள்ள அலுவலகங்கள் விபரம், விசாரணை நிலவரம் குறித்து எளிதாக அறிந்து கொள்ளவும் ஏதுவாகும்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவி திருமதி. அ.ச. குமரி, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் செயலர் மற்றும் சமூக நல ஆணையர் திருமதி. வே. அமுதவல்லி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, அரசு இணைச் செயலாளர் ச.வளர்மதி, மற்றும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

விருதுநகர் மாவட்ட முன்னாள் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வே.தங்கப்பாண்டியன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு மல்லாங்கிணறில் உள்ள அன்னாரின் நினைவிடத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் தென்காசி மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ., சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

நலிந்த பிரிவினர் - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - எஸ்.சி. - எஸ்.டி. பிரிவு

தொழில் முனைவோர்க்கு எளிதாக நிதியுதவி கிடைக்க ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா?

மாநிலங்களவையில் - மு.சண்முகம் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக.2- மாநிலங்களவையில் கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளருமான மு.சண்முகம் எழுப்பிய கேள்வி வருமாறு:

நலிந்த பிரிவினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், எஸ்.சி. மற்றும் எஸ்.டி. பிரிவினர் ஆகிய தொழில் முனைவோர்க்கு எளிதாக நிதியுதவி கிடைப்பது குறித்து அரசு ஏதேனும் மறு ஆய்வு செய்திருக்கிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

நிதியைப் பெறுவதில் தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு கடன் வழங்குவதற்கான அளவுகோல்கள் எளிமையாக்கப்பட்டு வங்கிகளின் சுற்றுச்சூழல் அமைப்பு பலப்படுத்தப்படுமா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு ஒன்றிய அரசின் நிதி இணையமைச்சர் ஸ்ரீபங்கஜ் சௌத்திரி அளித்த பதில் வருமாறு:

கட்டுப்பாடற்ற கடன் சூழலில், கடன் வசதிகள் தனிப்பட்ட வங்கி வாரியங்களின் அங்கீகரிக்கப்பட்ட கடன் கொள்கைகள் ஆகியவை ரிசர்வ் வங்கியின் (RBI) தற்போதைய வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

அனைத்து கடன்களுடன் இணைக்கப்பட்ட திட்டங்களையும் அவ்வப்போது மதிப்பாய்வு செய்து, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதி (SC) மற்றும் பழங்குடியினர் (ST) ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள், பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த தொழில்முனைவோருக்கு எளிதாக நிதியுதவி கிடைப்பதை எளிதாக்கும் வகையில் பல முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

அவற்றில் சில 2016 ஆம்

ஆண்டு ஏப்ரல் 5 ஆம் தேதி ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் (SUPI) தொடங்கப்பட்டது, இதன் மூலம் உற்பத்தி, சேவைகள் அல்லது வர்த்தகத் துறை மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய செயல்பாடுகளுக்கு ஒரு கிரீன்ஃபீல்ட் நிறுவனத்தை அமைப்பதற்காக ஒரு வங்கிக் கிளையில் குறைந்த பட்சம் ஒரு பட்டியல் சாதி (SC), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) மற்றும் ஒரு பெண் கடன் வாங்குபவருக்கு ரூ.10 லட்சம் மற்றும் ரூ.1 கோடி வரை வழங்கப்படுகிறது.

2019-20 யூனியன் பட்ஜெட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், இந்தத் திட்டம் 2025 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது.

2015 ஆம் வருடம் ஏப்ரல் 8 ஆம் தேதி அன்று தொடங்கப்பட்ட பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY) கீழ் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், எஸ்சி மற்றும் எஸ்டி பிரிவைச் சேர்ந்த தொழில் முனைவோர்களுக்கு பிணையில்லாமல் தங்கள் வணிக நடவடிக்கைகளை அமைக்க அல்லது விரிவாக்க 10 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது.

மேலும், ஆர்பிஐ முன்னுரிமைத் துறை கடன் வழங்குதல் (பிஎஸ்எல்) வழிகாட்டுதல்களை வடிவமைத்துள்ளது, இது கடன் தகுதியுடையதாக இருந்தாலும், வங்கி அமைப்பில் இருந்து போதுமான கடன் கிடைக்காத பிரிவுகளுக்கு கடன் வழங்குவதை எளிதாக்குகிறது. ஆர்பிஐ 40% சரிசெய்யப்பட்ட நிகர வங்கிக் கிரெடிட் (ANBC) அல்லது பி.எஸ்.எல்.லுக்கான ஆஃப்-பேலன்ஸ் ஷீட் எக்ஸ்போஷர்களுக்கு (CEOBE) சமமான கிரெடிட் இலக்கை நிர்ணயித்துள்ளது.

இதில் 12% தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு கடன் வழங்க கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது, இதில் பட்டியல் சாதியினர் (எஸ்சி) மற்றும் பழங்குடியினர் (எஸ்டி), சிறு மற்றும் குறு விவசாயிகள், கைவினைஞர்கள், பயனாளிகள் ஆகியோர் அடங்குவர்.NRLM/NULM, SHGகள், சிறுபான்மை சமூகங்கள் போன்றவை.

ரிசர்வ் வங்கியின் தகவலின்படி, 2023-24 நிதியாண்டில் பலவீனமான பிரிவினருக்கான முன்னுரிமை துறை கடன் (பிஎஸ்எல்) கீழ் 13.53% சாதனை படைத்துள்ளது.

மத்திய அல்லது மாநில அரசால் அவ்வப்போது வகுக்கப்பட்ட திட்ட வழிகாட்டுதல்களின்படி, அனைத்து வங்கிகளும் பட்டியல் சாதியினரின் கடன் வாங்குபவர்களுக்கு சலுகைக் கடன்களை வழங்குகின்றன.

இவ்வாறு ஒன்றிய அரசின் நிதி இணையமைச்சர் ஸ்ரீபங்கஜ் சௌத்திரி பதிலளித்துள்ளார்.

தி.மு.க. தொண்டர் அணி

மாவட்ட அமைப்பாளர் -துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தொண்டர் அணிச் செயலாளர் பெ. சேகர் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

சேலம் கிழக்கு மாவட்டம்

தலைவர் : சி.பாண்டியன்,110, கலைஞர் காலனி, நரசிங்கபுரம், ஆத்தூர், சேலம் மாவட்டம்.

துணை தலைவர்: ர. ஆனந்தகுமார், கொட்டவாடி, பெத்தநாயக்கன் பாளையம், சேலம் மாவட்டம்.

அமைப்பாளர்: செ.பழனிவேல் (எ) அப்பு, 6/154, பெருமாள் கோவில் தெரு, அனுப்பூர், வாழப்பாடி, சேலம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் : கூ. கருப்பையா, 3/257, காமராஜ்நகர், நாவலூர், தலைவாசல், சேலம்மாவட்டம். ச. முத்துசாமி, 56/45, காளியம்மன் நகர், காட்டுவளவு, அயோத்தியாபட்டணம், சேலம் மாவட்டம். ம. ஸ்ரீபதி, 148, அருந்ததியர் தெரு, தம்மம்பட்டி, சேலம் மாவட்டம். க.காமராஜ், காரிப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், சேலம் மாவட்டம். ந.தேவன், 92/13, ஆத்துப்பாலம், அயோத்தியாப்பட்டணம், சேலம் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01.08.2024

மாஸ்டர் பெ. சேகர்,
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி